வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 28.07.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*__தலைப்புச் செய்திகள்__*

- வினாத்தாள் கசிவைத் தடுப்பதற்கான, பொதுத் தேர்வுகள் சட்டத் திருத்த மசோதா, இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
- குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பதவிக் காலத்தில் 4 ஆண்டுகளை பூர்த்தி செய்திருப்பதை ஒட்டி, குடியரசுத் தலைவர் மாளிகை தொடர்பான பல்வேறு திட்டங்களை இன்று தொடக்கி வைத்தார்.
- கடலோர காவல் படையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கான, 2 முக்கிய கொள்கை சீர்திருத்தங்களை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று வெளியிட்டுள்ளார்.
- புதுச்சேரியில் அமைச்சர்களுக்கான இலாக்கா ஒதுக்கீட்டுப் பட்டியலுக்கு, மேலும் தாமதமின்றி, துணைநிலை ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என, எதிர்கட்சித் தலைவர் திரு. நாஜீம் கோரியுள்ளார்.

*__மக்களவை விவாதம் -1 (15)__*

நீட் உள்ளிட்ட தேர்வுகளில், வினாத்தாள் கசிவு மற்றும் இதர முறைகேடுகளை தடுப்பதற்கான, பொதுத் தேர்வுகள் சட்டத் திருத்த மசோதா, இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் இது குறித்து, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், தற்போது இது குறித்து கடுமையான சட்டம் தேவை என, பிரதமரே முடிவு செய்திருப்பதாக, மத்திய

பணியாளர் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், மசோதாவை விவாதங்களுக்கு கொண்டு வந்து பேசுகையில் கூறினார். இந்திய இளைஞர்களின் நலன்களை பாதுகாக்கவும், இளைஞர்களின் எதிர்காலம் எவராலும் பாதிக்கப்படுவதை முற்றிலுமாக தடுக்கவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதி பூண்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். வினாத்தாள் கசிவு போன்ற முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை மற்றும் 10 கோடி ரூபாய் வரை, அபராதம் விதிக்கவும், சொத்துக்களை பறிமுதல் செய்யவும்,புதிய மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

*மக்களவை விவாதம் -1 (13)*

(வாய்ஸ்)

பொதுத் தேர்வுகள் சட்டத் திருத்த மசோதா, இன்றைய சூழலுக்கு அவசியம் தேவை என்று, பிஜேபி மக்களவை உறுப்பினர் திருமதி. பான்சுரி ஸ்வராஜ், விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில் கூறினார். புதிய மசோதா வெறும் கண் துடைப்பு மட்டுமே என்றும், கல்வித் துறையில் அரசுக்கு தீவிர அக்கறை இல்லை என்றும், காங்கிரஸ் உறுப்பினர் திரு. கவுரவ் கோகோய் குற்றம் சாட்டினார். நீட் தேர்வை நடத்தும், தேசிய தேர்வு முகமைக்கு, Out-Sourcing என்னும் அயலாக்க முறையில் அதிகாரிகளை நியமிப்பது குறித்து, சமாஜ்வாதி உறுப்பினர் திரு. அகிலேஷ் யாதவ் கவலை வெளியிட்டார். AITC உறுப்பினர் திரு. அபிஷேக் பேனர்ஜி, மசோதாவை வரவேற்றுப் பேசுகையில், நேர்மையான தேர்வுகளை எதிர்பார்க்கும் உரிமை, ஒவ்வொரு மாணவருக்கும் இருப்பதால், வினாத்தாள் கசிவை தடுக்க கடுமையான சட்டம் அவசியம் என்றார். விவாதங்கள் தொடர்கின்றன.

***நாடாளுமன்றம் ஒத்தி வைப்பு (6)***

நீட் விவாகரம் தொடர்பான மாணவர் போராட்டத்தில், போலீஸ் நடவடிக்கைகள் குறித்த விவாதம் கோரி, எதிர் கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், இன்று நாடாளுமன்ற இரு அவைகளும், பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவையில், பிற்பகல் 2 மணிக்கு அவை மீண்டும் கூடிய சமயத்திலும், அமளி நீடித்ததால், அவை, நாளை காலை 11 மணி வரை ஒத்தி வைக்கப் பட்டது.

***மாணவர் நீதிமன்றம் (16)***

டெல்லி மாணவர் போராட்டத்தின்போது கைது செய்யப் பட்டவர்களில், 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள், மற்றும், குற்றப் பின்னணி இல்லாதவர்களை விடுவிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மாணவர் போராட்டம் குறித்த, டிஜிட்டல் மற்றும் எலக்ட்ரானிக் ஆதாரங்களை பாதுகாப்பாக வைத்திருக்கவும், நீதிமன்றம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. போராட்டத்தின்போது மாணவர்கள் மற்றும் போலீசாருக்கு காயம் ஏற்பட்டதாக கூறப்படுவது குறித்து, நியாயமான, சுதந்திரமான விசாரணைக்குத் தேவை இருப்பதாகவும், நீதிமன்றம் கூறியுள்ளது. மாணவர்கள்மீது, அபரிமித பலப் பிரயோகத்தை போலீசார் பயன்படுத்தியதாக கூறப்படுவது குறித்த விசாரணைகளின் போது, உச்சநீதிமன்றம் இன்று, இந்த இடைக்கால உத்தரவுகளை வெளியிட்டது. போராட்டம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள் மீது, டெல்லி அரசு விசாரணைகளை தொடர்ந்து நடத்தலாம் என்றாலும், சட்டப்படி போராட்டத்தில் ஈடுபட தகுதியுள்ள மாணவர்கள் மீது, விசாரணை முடியும் வரை, பலவந்த நடவடிக்கை எதையும் மேற்கொள்ளக் கூடாது என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

*காமன்வெல்த் – மோடி (10)*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின், மாற்றுத் திறனாளி மகளிர் குண்டு எறிதல் பிரிவில், தங்கப் பதக்கம் வென்றுள்ள இந்திய வீராங்கனை ஷர்மிளா தன்கருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். காமன்வெல்த் பாரா அதலெடிக் போட்டிகளில், தங்கம் வெல்வதற்கான இந்தியாவின் 20 ஆண்டு காத்திருப்பு, தற்போது நிறைவேறி இருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். ஆடவர் 79 கிலோ பளு தூக்கும் பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள இந்திய வீரர் வல்லூரி அஜய் பாபு, ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள இந்திய வீரர் சர்வேஷ் குஷாரே ஆகியோருக்கும் பிரதமர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

*மோடி – அஸ்ஸாம் (5)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, அஸ்ஸாமைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து, மாநிலத்தின் வெள்ள நிலவரங்கள் குறித்து கேட்டு அறிந்தார். மத்திய அரசு, அஸ்ஸாம் மாநில அரசுடன் இணைந்து, பாதிக்கப் பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*முர்மு (9)*

குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பதவிக் காலத்தில் 4 ஆண்டுகளை பூர்த்தி செய்திருப்பதை ஒட்டி, இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு திட்டங்களை மெய்நிகர் முறையில் தொடக்கி வைத்தார். குடியரசு தலைவர் மாளிகை வளாகத்தில், குழந்தைகளுக்காக அமைக்கப் பட்டுள்ள, கில்காரி விளையாட்டு பகுதியை உள்ளடக்கிய பச்பன் பால் பரிசர் மண்டலம், பார்வையாளர்களுக்கு வழிகாட்டுவதற்கான மொபைல் செயலி, பெண்கள் மூலமான ராஹி என்னும் இலவச இ-பேருந்து சேவை போன்ற வசதிகள் இதில் அடங்கும்.

*கடலோர காவல் -1 (3)*

கடலோர காவல் படையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கான 2 முக்கிய கொள்கை சீர்திருத்தங்களை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று வெளியிட்டுள்ளார்.

*கடலோர காவல் -2 (12)*

(வாய்ஸ்)

கடலோர காவல்படையின் ஆள்சேர்ப்பு, மற்றும், பணி நிலவரங்களில், ஆண்–பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில், இந்த சீர்திருத்தங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. பணியின் போது நடுக்கடலில் காணாமல் போகும், கடலோர காவல் படையினரின் குடும்பங்களுக்கு கருணைத் தொகை வழங்குவதற்கான நிர்வாக நடைமுறைகளை சீரமைக்கவும், புதிய கொள்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. புதிய கொள்கை சீர்திருத்தங்களால், கடலோர காவல் படையினரின் மன உறுதியும், செயல்பாட்டுத் திறனும், அதிகரிக்கும் என மத்திய உள்துறை அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். கடலோர காவல்படையை, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற, திறமையான, நவீன கடல்சார் படையாக மேம்படுத்த, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*ஸ்கைரூட் சந்திப்பு* (13)

மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, இன்று புதுடெல்லியில், ஸ்கைரூட் ஏரோ ஸ்பேஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர்கள் பவன்குமார் சந்தனா, பரத் டாக்கா ஆகியோரை சந்தித்துப் பேசினார். ஸ்கைரூட் நிறுவனத்தின் செயற்கைக் கோள், வெற்றிகரமாக சுற்றுப் பாதையை எட்டி இருப்பது, இந்தியாவின் வர்த்தக ரீதியிலான விண்வெளிப் பயணத்தில் முக்கிய மைல் கல் என்று, சமூக ஊடகத்தில் அமைச்சர் தெரிவித்துள்ளார். சரியான புதுமைகளை, சரியாக திட்டமிட்டு, சரியாக அமல்படுத்தினால், எதையெல்லாம் சாதிக்கலாம்

என்பதற்கு, இந்த வெற்றி ஒரு சிறந்த உதாரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தனியார் தொழில் முயற்சிகள் மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்க, எதிர்கால நோக்குடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி அமல்படுத்தி வரும் புதிய சீர்திருத்தங்களே இத்தகைய வெற்றிகளுக்கு காரணம் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

*__பஞ்சாப் அம்ரித்ஸர் (10)__*

வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களில் பஞ்சாபியர்கள் அதிகம் என்பதை கருத்தில் கொண்டு, மத்திய அரசு, பஞ்சாபின் அம்ரித்ஸர் நகரை, ஏர் இண்டியா நிறுவனத்தின் ஈசி – கனெக்ட் திட்டத்தின் கீழ், மையமும் – ஆரங்களும் முறையில், உலக அளவிலான 27 முக்கிய நகரங்களுடன் இணைத்துள்ளது. இதனால், அம்ரித்ஸரில் குடிபெயர்வு சோதனைகளை முடித்துக் கொள்ளும் பயணிகள், டெல்லியில் இருந்து வெளிநாட்டு பயணத்தை தொடக்கும் முன்பாக, டெல்லி விமான நிலையத்தில் இத்தகைய சோதனைகளை தவிர்க்க முடியும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இப்புதிய வசதியை மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு, இன்று மெய்நிகர் முறையில் தொடக்கி வைத்தார்.

*__நாஜீம் (8)__*

புதுச்சேரியில், அமைச்சர்களுக்கான இலாக்கா ஒதுக்கீட்டு பட்டியலை, முதலமைச்சர் கொடுத்த பிறகும், துணை நிலை ஆளுநர் ஒப்புதல் வழங்காமல் வைத்து இருப்பதால், மக்கள் பணிகள் பாதிக்கப் பட்டுள்ளதாக, திமுக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. நாஜீம் கூறியுள்ளார். இன்று சட்டமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலாக்கா ஒதுகீட்டை இன்று மாலைக்குள் அறிவிக்க

முதலமைச்சரும், அமைச்சர்களும் துணைநிலை ஆளுநரிடம் வலுவாக வலியுறுத்த வேண்டும் என்றார்.

*__மாஹி (5)__*

மாஹியில் உள்ள ஸ்ரீநாராயணா கல்வியியல் கல்லூரியில், நடப்பு கல்வி ஆண்டிற்கான B.Ed., வகுப்புகளை சட்டமன்ற உறுப்பினர் திரு. அசோக்குமார் தொடக்கி வைத்தார். ஆசிரியர்கள் கல்வி கற்றுக் கொடுப்பதுடன் நில்லாமல், மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும், சமுதாயத்திற்கு முன்மாதிரியாகவும் திகழ வேண்டும் என அவர் தமது உரையில் கூறினார்.

*__வானிலை (12)__*

தமிழக கடலோரப் பகுதிகளில், கீழ் மட்ட வளிமண்டலத்தில், பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும் – நாளையும். மேற்குத் தொடர்ச்சி மாலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதரப் பகுதிகள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆகஸ்ட் 3ஆம் தேதி வரை, புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசான மழை இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*__உத்த□ரகண்ட் மணல் சரிவு (4)__*

உத்ராகண்ட்டில், கனமழையால் மலைப் பாதையில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் காரணமாக, 4 முக்கிய புண்ணித் தலங்களுக்கான சார்தாம் யாத்திரை, நாளை வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. வானிலை நிலவரங்கள் சீரான பின்னர், பயணிகள் யாத்திரையைத் தொடர அனுமதிக்கப்படும் என்றும், அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

*__மாவோயிஸ்ட் (7)__*

ஜார்க்கண்ட்டில், கோல்ஹன் மற்றும் லக்தேஹார் பகுதிகளைச் சேர்ந்த 16 மாவோயிஸ்ட்டுகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, ராஞ்சி போலீசாரிடம் சரணடைந்து உள்ளனர். இவர்களில், ஒருவரின் தலைக்கு ஏற்கனவே 15 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டு இருந்தது. சரணடைந்த மாவோயிஸ்ட்டுகளுக்கு ஜார்க்கண்ட் மாநில அரசின் நயி திஷா – நயி பஹல் திட்டத்தின் கீழ், மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படும் என்றும், காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.